ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1898/27- 2015 ජනවාරි මස 20 වැනි අඟහරුවාදා - 2015.01.20

1898/27ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறியீட்டு இலக்கம்.: டிஐகே/எல்ஏஎன்/02/30/40.

பொது மக்கள் தேவை நிமித்தம் அவசியப்படுகின்ற கீழ் குறிப்பிடப்படும் காணி/காணிகள் மீதான உரிமைகளை சுவீகரிக்க அரசு உத்தேசிப்பதாக 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

**எடுத்துக்கொள்ள விருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் வெவுறுகன்னல கிராம சேவையாளர் பிரிவில் வலஸ்கல கிராமத்தில் அமைந்துள்ள மாத்தறை சிரேஷ்ட நிலஅளவையாளிரின் மு. பி. மாறை 2610 ஆம் இலக்க முதன்மை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழ் குறிப் பிடப்படும் காணித் துண்டுகள்.

1.துண்டு இல: 01

காணியின் பெயர்: கமராலகெஉஸ்வத்த; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம் ஓடுகள் கொண்டு வேயப்பட்ட நிரந்தரக் கட்டிடமொன்று மலசல கூட குழியொன்று. உடன் தற்காலிக பயிரச் செய்கையொன்றும் உள்ளது.; ஆரம்ப உரிமையாளர்: வலஸ்கல, கலென்ஆர, சிறீகரயில் வதியும் பீ. சமந்தி வஹீஷா முத்துக்குமாரண; விஸ்தீரணம்: 0.0397 ஹெக்டயார்.

மேற் குறிப்பிட்ட காணிக்கு/காணி மீதான உரிமை களுக்கு, அதிகாரங்கள் அல்லது வேறு வகைகளிலான தொடர்புகளைக் கொண்டிருக்கும் அனைத்து நபர்களும் அவரவர்களின் அல்லது அவர்களின் எழுத்து மூல அதிகாரங்கள் வழங்கப்பட்டவர்களும் 2015.01.22 ஆம் திகதி மு. ப. 10.30 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத் தில் என்னை நேரில் காணல் வேண்டும்.

இன்னும் 2015.01.15 ஆம் திகதிக்கு முன் அந்தக் காணி/ காணிகள் தொடர்பான அவர்களின் உரிமைகளின் தன்மை பற்றி குறிப்பிட்ட அந்தக் காணி/காணி மீதான உரிமை களை சுவீகரிக்கப்படுவதனால் நஷ்டஈடு, கோருவதற்கான காரணங்கள் பற்றியும், அந்த நஷ்டஈடு, நஷ்டஈட்டுத் தொகை கணக்கீடு செய்யப்பட்ட விதம் பற்றியும் இரண்டு பிரதிகளிலான எழுத்தாவணங்கள் வாயிலாக எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

பீ. எஸ். ரஞ்சித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2015, சனவரி 01.

2-64

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.